Registered as a News Paper
பக்கங்கள்: 04
விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
Peoples Daily
மக்கள் தினசரி

நாதம்: 02 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | தை 04 | (18-01-1992) | சனிக்கிழமை | ஓசை: 334

## சர்வதேச செஞ்சிலுவை 25 இல் தீவகம் செல்லும்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு எதிர்வரும் இருபத்தைந்தாம் திகதி தீவகப் பகுதிக்கு விஜயம் செய்யவுள்ளது. கடந்தகால சிறிலங்கா இராணுவ சுற்றிவளைப்பின் போது இராணுவப் பிடிக்குள் சிக்கியுள்ள பொது மக்களை சந்தித்து அவர்களுக்குள்ள பிரச்சினைகள் பற்றிஅறியவும் நோய் வாய்ப்பட்டுள்ளவர்களை சிகிச்சைக்காக இங்கு அழைத்து வரவுமே இவர்கள் அங்கு செல்லவுள்ளதாகத் தெரியவருகிறது. (ச)

# ஐ. நாவுக்கு புலிகள் கடும் ஆட்சேபம்

# இந்தியா-சிறிலங்கா மீது கண்டனம்

## வீதி விபத்தில் ஐவர் பலி

[யாழ்ப்பாணம்]

கடந்த சில தினங்களில் வீதி விபத்துகளில் 5 பேர் பலியாகியுள்ளனர். பலர் காயம் அடைந்துள்ளனர். இந்த விபத்துகளுக்கு காரணம் வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்காதது ஆகும்.

தமிழீழ காவல் துறையினால் கொடுக்கப்படும் அறி

( 3ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகளை அனுப்புவது மனிதாபிமானமற்றது

(யாழ்ப்பாணம்)



தமிழ் நாட்டிலிருந்து பல்லாயிரக் கணக்கான தமிழ் அகதிகளை வலுக்கட்டாயமாக இலங்கைக்கு திருப்பியனுப்புவது குறித்தும், அவர்களைச் சிங்கள இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள அகதி முகாம்களில் தடுத்து வைப்பது குறித்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஐ. நா. சபைக்கு கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா ஐ. நா. சபைச் செயலாளர் நாயகத்திற்கு அனுப்பியுள்ள மகஜரில் இந்திய - சிறிலங்கா அரசுகளினது இந்த நடவடிக்கையானது அகதிகள் சம்பந்தமான ஐ. நா. மனித உரிமை விதிமுறைகளை மீறிய செயலாகுமென கண்டித்துள்ளார். போர் தொடர்ந்து நடைபெறும் சூழ்நிலையில், இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படாத காலகட்டத்தில் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படக்கூடாதெனவும் திரு. மகேந்திரராசா சுட்டிக் காட்டியதுடன், ஐ. நாவை இதுசம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளார்.

ஐ. நா. செயலாளர் நாயகத்திற்கு இது தொடர்பாக திரு. கோ. மகேந்திரராசா அனுப்பிய மகஜரின் முழு விபரமும் வருமாறு:

ஆயுதப் போர் ஒன்று நடந்துகொண்டிருக்கும் இவ்வேளையில் மீளக்குடியமர்த்தல் என்ற போர்வையில் தென்னிந்தியாவில் இருந்து வலுக்கட்டாயமாக ஆயிரக் கணக்கில் தமிழ் அகதிகள் இலங்கைக்கு திருப்பி அனுப்படவுள்ளார்கள். இந்தத் தமிழ் அகதிகள் எதிர்நோக்கும் நெருக்கடிகளையும், கெடுதியையும் கவனத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்குமாறும்,

சிறிலங்கா இராணுவத்தின் அக்கிரமங்களினால் இந்தியாவில் தஞ்சமடைந்த சுமார் 2,30,000 இலங்கைத் தமிழ் அகதிகளை இந்தியா - சிறிலங்கா அரசுகள் தமக்கிடையில் இணங்கிக் கொண்டதற்கிணங்கத் திருப்பி அனுப்புகின்றன. சிறிலங்காவும், இந்தியாவும் தமக்கிடையில் அண்மைக் காலத்தில் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு இணங்க, சிறிலங்கா பாதுகாப்புப் படைகளின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசங்களில் தமிழ் அகதிகள் மீளவும் குடியமர்த்தப்படவுள்ளார்கள். சிறிலங்கா அரசு திருக்கோணமலை, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் அகதி முகாம்களை அமைத்து முதற் தொகுதியில் 30,468 அகதிகளைக் கொண்டுவரவுள்ளார்கள். இவர்கள் இந்த வாரத்தில் கொண்டுவரப்படுவார்கள் என்றும்—

( 3ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன்துறைதுறைமுகம் திறக்கப்படமாட்டாது

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை துறைமுகம் திட்டமிட்டபடி அடுத்த வாரம் திறந்துவிடப்படமாட்டாது என சர்வதேசசெஞ்சிலுவைச் சங்ககுழு யாழ். அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்துள.

கடந்த பல மாதங்களாக அங்கு பொருள்கள் இறக்கப்படாது பருத்தித் துறையில் இறக்கப்பட்டு யாழ். மாவட்டத்திற்கு விநியோகிக்கப்பட்டு வந்தது தெரிந்ததே.

இதில் பல சிக்கல்கள் இருப்

( 3ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிப்படை சார்ஜன்ட் கஞ்சிகுடிச்சாற்றில் பலி

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் கஞ்சி குடிச்சாறில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா விசேட அதிரடிப்படை கொமாண்டோவிற்கும் இடையில் கடும் மோதல் ஏற்பட்டது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இம்மோதலில் சிறிலங்கா அதிரடிப்படை சார்ஜன்ட் ஒருவர்ட் பலியாகியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## பொலிஸ் அதிகாரிக்கு மூன்று மாதகட்டாய லீவு

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் வெளிநாடுகள் இலங்கையில் மனித உரிமை மீறல் பற்றி அதிக கவனம் செலுத்துவதால் இலங்கையின் பொலிஸ் உயர் அதிகாரியான தர்மதாசா உடுகம்பொலவுக்கு மூன்று மாத கட்டாய லீவு வழங்கப்பட்டிருக்கின்றது.

அடுத்த மாத நடுப்பகுதியில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடை

(3 ஆம் பக்கம் பார்க்க)

## முதல் தொகுதி அகதிகள் திங்கட்கிழமை புறப்படுவர்

தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படும் முதல் தொகுதி அகதிகள் வரும் திங்கட்கிழமை சென்னைத் துறைமுகத்திலிருந்து கப்பல் மூலம் திருக்கோணமலைக்கு வரவுள்ளார்கள். 750 தமிழ் அகதிகள் எம். பி. அக்கர் கப்பலில் அனுப்பப்படுவார்கள்.

## வவுனியாவில் இருஇளைஞர் இராணுவத்தால் கைது

(வவுனியா)

புதுக்குளம் பகுதி நோக்கி மீண்டும் இராணுவத்தினர் முன்னேறி வந்து இரு இளை

களுக்குள் பதுங்கியிருந்து கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பின்னர் சாஸ்திரிகூழாங்

## கொழும்பிற்கு சுருட்டு; நடைமுறைதிட்டம் அறிவிப்பு

## இல.திரும்பும் அகதிகளுக்கு

சாத்து ஆகும்.
தமிழீழ காவல் துறையினால் கொடுக்கப்படும் அறி

(3ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன்துறைதுறைமுகம் திறக்கப்படமாட்டாது

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை துறைமுகம் திட்டமிட்டபடி அடுத்த வாரம் திறந்துவிடப்படமாட்டாது என சர்வதேசசெஞ்சிலுவைச் சங்ககுழு யாழ். அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்துள.

கடந்த பல மாதங்களாக அங்கு பொருள்கள் இறக்கப்படாது பருத்தித் துறையில் இறக்கப்பட்டு யாழ். மாவட்டத்திற்கு விநியோகிக்கப்பட்டு வந்தது தெரிந்ததே.

இதில் பல சிக்கல்கள் இருப்

(3ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிப்படை சார்ஜன்ட் கஞ்சிகுடிச்சாற்றில் பலி

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் கஞ்சி குடிச்சாறில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா விசேட அதிரடிப்படை கொமாண்டோவிற்கும் இடையில் கடும்மோதல் ஏற்பட்டது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இம்மோதலில் சிறிலங்கா அதிரடிப்படை சார்ஜன்ட் ஒருவர் பலியாகியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## பொலிஸ் அதிகாரிக்கு மூன்று மாதகட்டாய லீவு

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் வெளிநாடுகள் இலங்கையில் மனித உரிமை மீறல் பற்றி அதிக கவனம் செலுத்துவதால் இலங்கையின் பொலிஸ் உயர் அதிகாரியான தர்மதாசா உடுகம்பொலவுக்கு மூன்று மாத கட்டாய லீவு வழங்கப்பட்டிருக்கின்றது.

அடுத்த மாத நடுப்பகுதியில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடை

(3 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பிற்கு சுருட்டு; நடைமுறைதிட்டம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் இருந்து தென்பகுதிக்கு கப்பல்மூலம் சுருட்டு அனுப்புவதற்கான நடைமுறைத் திட்டத்தை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வெளியிட்டிருக்கின்றது.

தென்பகுதிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டிய சுருட்டுப் பொதிகளின் தொகையை சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர் அறிவிக்கவேண்டும். கொழும்பிற்கு எடுத்துச் செல்லப்பட்ட சுருட்டை இறக்கி அப்புறப்படுத்துவ

(3ஆம் பக்கம் பார்க்க)

### வடபகுதிக் கடலில் கைதான

## மீனவர் பற்றிய தகவல் 25 இல் தரப்படுமாம்

(யாழ்ப்பாணம்)

கடந்த சில நாட்களாக யாழ். குடா கடற்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினால் கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் பற்றிய தகவல்களை எதிர்வரும் 25 ஆம் திகதி அறிவிப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிக்கு இராணுவ பிரிகேடியர் உறுதி அளித்துள்ளார்.

கடந்த சில நாட்களின்முன் கைதுசெய்யப்பட்ட மீனவர்களை மீட்டுத்தருமாறு கோரி மீனவர் குடும்பங்களும், பாட

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு நடவடிக்கை மாத்தளையில் தீவிரம்

(மாத்தளை)

மாத்தளையில் தற்போது பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு சோதனை நடவடிக்கைகளும் முடுக்கி விடப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

முன்னர் அதாவது எட்டு ஒன்பது மாதங்களுக்கு முன்பு மாத்தளைக்கு வரும் வாகனங்கள் அனைத்தும் பிரயாணிகளும் கடும் சோதனைக்குள்ளாக்கப்பட்டிருந்தனர் பின்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகளை அனுப்புவது மனிதாபிமானமற்றது

(யாழ்ப்பாணம்)



தமிழ் நாட்டிலிருந்து பல்லாயிரக் கணக்கான தமிழ் அகதிகளை வலுக்கட்டாயமாக இலங்கைக்கு திருப்பியனுப்புவது குறித்தும், அவர்களைச் சிங்கள இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள அகதி முகாம்களில் தடுத்து வைப்பது குறித்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஐ. நா. சபைக்கு கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா ஐ. நா. சபைச் செயலாளர் நாயகத்திற்கு அனுப்பியுள்ள மகஜரில் இந்திய - சிறிலங்கா அரசுகளினது இந்த நடவடிக்கையானது அகதிகள் சம்பந்தமான ஐ. நா. மனித உரிமை விதிமுறைகளை மீறிய செயலாகுமென கண்டித்துள்ளார். போர் தொடர்ந்து நடைபெறும் சூழ்நிலையில், இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படாத காலகட்டத்தில் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படக்கூடாதெனவும் திரு. மகேந்திரராசா சுட்டிக் காட்டியதுடன், ஐ. நாவை இதுசம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளார்.

ஐ. நா. செயலாளர் நாயகத்திற்கு இது தொடர்பாக திரு. கோ. மகேந்திரராசா அனுப்பிய மகஜரின் முழு விபரமும் வருமாறு:

ஆயுதப் போர் ஒன்று நடந்துகொண்டிருக்கும் இவ்வேளையில் மீளக்குடியமர்த்தல் என்ற போர்வையில் தென்னிந்தியாவில் இருந்து வலுக்கட்டாயமாக ஆயிரக் கணக்கில் தமிழ் அகதிகள் இலங்கைக்கு திருப்பி அனுப்படவுள்ளார்கள். இந்தத் தமிழ் அகதிகள் எதிர்நோக்கும் நெருக்கடிகளையும், கெடுதியையும் கவனத்திற்கொண்டு உடன் நடவடிக்கை எடுக்குமாறும்,

சிறிலங்கா இராணுவத்தின் அக்கிரமங்களினால் இந்தியாவில் தஞ்சமடைந்த சுமார் 2,30,000 இலங்கைத் தமிழ் அகதிகளை இந்தியா - சிறிலங்கா அரசுகள் தமக்கிடையில் இணங்கிக் கொண்டதற்கிணங்கத் திருப்பி அனுப்புகின்றன. சிறிலங்காவும், இந்தியாவும் தமக்கிடையில் அண்மைக் காலத்தில் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு இணங்க, சிறிலங்கா பாதுகாப்புப் படைகளின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசங்களில் தமிழ் அகதிகள் மீளவும் குடியமர்த்தப்படவுள்ளார்கள். சிறிலங்கா அரசு திருக்கோணமலை, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் அகதி முகாம்களை அமைத்து முதற் தொகுதியில் 30,468 அகதிகளைக் கொண்டுவரவுள்ளார்கள். இவர்கள் இந்த வாரத்தில் கொண்டுவரப்படுவார்கள் என்றும்—

(3ஆம் பக்கம் பார்க்க)

## இல.திரும்பும் அகதிகளுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு

(கொழும்பு)

இந்திய அகதிமுகாங்களிலிருந்து நாடு திரும்பும் அகதிகளுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று புனர்வாழ்வு ராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது.

வரும் புதன் கிழமை இலங்கை திரும்பும் தமிழ் அகதிகளில் அரசாங்க ஊழியர்களும் உள்ளனர் என்றும்,

(3ஆம் பக்கம் பார்க்க)

## முதல் தொகுதி அகதிகள் திங்கட்கிழமை புறப்படுவர்

தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படும் முதல் தொகுதி அகதிகள் வரும் திங்கட்கிழமை சென்னைத் துறைமுகத்திலிருந்து கப்பல் மூலம் திருக்கோணமலைக்கு வரவுள்ளார்கள். 750 தமிழ் அகதிகள் எம். பி. அக்கர் கப்பலில் அனுப்பப்படுவார்கள்.

## வவுனியாவில் இருஇளைஞர் இராணுவத்தால் கைது

(வவுனியா)

புதுக்குளம் பகுதி நோக்கி மீண்டும் இராணுவத்தினர் முன்னேறி வந்து இரு இளைஞர்களைக் கைது செய்து கொண்டு சென்றுள்ளனர்.

கடந்த 14-ம் திகதி காலை பேயாடிகூழாங்குளம் இராணுவ முகாமிலிருந்து புதுக்குளம் பகுதி நோக்கிவந்த இராணுவத்தினர் பற்றைகளுக்குள் பதுங்கியிருந்து கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பின்னர் சாஸ்திரிகூழாங்குளம் குளக்கட்டில் வைத்து சந்திரன் என்ற மணிபுரம் வாசி ஒருவரை கைது செய்து கூட்டிச் சென்றனர்.

புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த இன்னொருவரும் கைது செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது. (தி)

# விடுதலைப்புலிகளுக்கு எதிராக இந்தியா சிறிலங்கா கூட்டணி

தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தையும், அந்த போராட்டத்தை முன்னெடுத்துவரும் விடுதலைப்புலிகள் இயக்கத்தையும் நசுக்கிவிடும் முயற்சியில் இந்தியாவும் சிறிலங்காவும் கூட்டாக இணைந்து செயற்படும் சாத்தியக்கூறுகள் உருவாகியுள்ளதாக அதிகாரபூர்வ வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. விடுதலைப் புலிகளின் தன்னாட்சிஉரிமைப் போராட்டம் இந்தியாவினதும் சிறிலங்காவினதும் பிரதேச ஒருமைப்பாட்டிற்கும் பூகோள நலன்களுக்குபெரும்அச்சுறுத்தலாக இருப்பதாக இரு அரசுகளும் கருதுவதாகவும் இதனால் இரு நாடுகளும் ஒன்றுசேர்ந்து புலிகள்இயக்கத்தை ஒடுக்குவதற்கு கூட்டு நடவடிக்கைகளில் இறங்கலாமெனவும் இந்தச் செய்திகள் கூறுகின்றன.

ராஜீவ் காந்தி கொலைச் சம்பவம் தொடர்பாக ஏற்கனவே இரு நாடுகளினதும் புலனாய்வுத் துறை அதிகாரிகள் பரஸ்பரம் தகவல்களை பரிமாறி ஒத்துழைத்து வருவதும் கடற்பிரதேசத்தில் இரு நாட்டு கடற்படைகளும் கூட்டாக ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதும் இந்த

(3 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய அரசாங்கம் எமக்கு சாதகமாகஉள்ளது - பேனாட் திலகரெட்னா

(கொழும்பு)

இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்திய அரசின் மதிப்பீடு இலங்கைக்கு சாதகமாக இருக்கின்றது என்று சிறிலங்காவின் வெளியுறவுத் துறைச் செயலாளர் பேனாட் திலகரெட்னா தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் இந்திய அர

(3 ஆம் பக்கம் பார்க்க)

# சூழல் சுகாதாரம் பேணுவோம் எம் மக்கள் நலன் காப்போம்

## எம் இனிய மக்களே !

சற்று நில்லுங்கள்! உங்கள் அவசர வாழ்க்கையின் அத்தி வாரத்தைப் பாருங்கள்! சிந்தியுங்கள்! எமது புதைகுழிகளை நாமே சமைப்பதா! எதிரியின் எண்ணத்திற்கு துணை போவதா?

*சிங்கள இனவாத அரசு பாரிய குண்டுகள் வீசியது! மக்களைப்பட்டினி போட்டு பாடையில் ஏற்றியது! தெருவெல்லாம் பற்றைக்காடுகள், குப்பை மேடுகள், துர்நாற்றங்கள், வடிகால்கள், நோய்க்காவிகளின் உற்பத்திக்கூடங்கள் உயிர்க்காப்பு மருந்துகளில்லை நுண்ணுயிர் கொல்லிகளில்லை எம்மண்ணில் நெருப் புக்காய்ச்சல், மஞ்சட்காய்ச்சல், வயிற்றோட்டம் அநியாயமான அவச் சாவுகள்.*

*எம்மிடம் அறிவு என்னும் அருமருந்துண்டு. துன்பம் தீரவழியுண்டு சுகாதார முறைமைகளை சீராகபேணுவோம்*
*எதிரியின் எண்ணத்தை உடைத்துத்தகர்ப்போம். உறுதிமிக்க ஆரோக் கிய வாழ்வை எம்மக்களிற்கு அளிப்போம்.*
*உங்கள் மண்ணை சுத்தமாக்குங்கள், விடியல் வெகுதூரத்தில் இல்லை.*

❋ குடியிருப்பாளர்களே உங்கள் வீட்டுக்கழிவுகள் போடுமிடம் வீதிகளல்ல வடிகால்களல்ல வீட்டுவளவுகளுட் புதையுங்கள் அல்லது எரியுங்கள். சுற்றாடலிலுள்ள பற்றைக் காடுகளை அழியுங்கள்.

❋ உணவுச்சாலை உரிமையாளர்களே உங்கள் கழிவுகளை தகரக் கொள்கலன்களுள் சேகரித்துப் பேணுங்கள்.சூழல் சுகா தாரம் கெட வீசாதீர்கள்.

❋ வடிகால்களை மூடாதீர்கள். அதில் தடைகளை ஏற்படுத்தா தீர்கள்.

❋ தேவையில்லாதவற்றை வீசாதீர்கள் புதையுங்கள் அல்லது எரியுங்கள் அல்லது தாழ்வான நிலப்பரப்புகளுட் சேர்த்து நீர் தேங்குவதை தடுத்துக் கொள்ளுங்கள்.

❋ மலம் கழிக்கப்பட வேண்டிய தொன்றுதான்.ஆனால்கண்ட கண்ட இடங்களில் கழிக்காதீர்கள். மல கூடங்களைப் பயன் படுத்துங்கள் உங்கள் மலத்திலுள்ள நுண்ணங்கிகள் மற்றைய வர்கள் உடலுட் செல்ல வகை செய்யாதீர்கள். உங்களையும் கொன்று மற்றவர்களையும் கொல்லாதீர்கள்.

❋ தெருவோரங்களில் சுகாதாரமற்ற முறையில் விற்பனை யாகும் உணவுகளைப் பசித்தாலும் புசிக்காதீர்கள்.

❋ உங்கள் கிணறுகளிற்கு குளோரீன் இடுங்கள். சுத்தமான கொதித்தாறிய நீரையே பருகுங்கள்.

❋ உங்கள் கால்நடைகளைக் கட்டி வளருங்கள். கட்டாக்காலி களிடமிருந்து உங்கள் அயலவர்களைக் காப்பாற்றுங்கள். மர ணத்தின் பின்னே கப்பலில் வரும் சிறுமருந்துகள் உயிர்காக் காது.

**சூழல் சுகாதார கேடுகளைக் களைய உங்கள் பகுதியிலுள்ள சுகாதாரவைத்திய அதிகாரி பணி மனை, உள்ளூராட்சி மன்றுகளை நாடுங்கள். பரிகாரம் தேடுங்கள். மக்களின் நோயற்ற சுக வாழ்விற்கு தூய்மையான அமைதியான சூழல் வேண்டும். சுயநலம் விடுவோம். பொதுநலம் படைப்போம். தொற்று நோய்களை சாகடிப் போம்.**

இது ஒரு விளம்பரமல்ல
உங்கள் சுகவாழ்விற்கு
கசப்பற்ற இன்சுவை மருந்து

சிங்கள இனவாத அரசு பாரிய குண்டுகள் வீசியது!
மக்களைப்பட்டினி போட்டு பாடையில் ஏற்றியது!
தெருவெல்லாம் பற்றைக்காடுகள், குப்பை மேடுகள், துர்நாற்றங்கள், வடிகால்கள், நோய்க்காவிகளின் உற்பத்திக்கூடங்கள் உயிர்க்காப்பு மருந்துகளில்லை நுண்ணுயிர் கொல்லிகளில்லை எம்மண்ணில் நெருப்புக்காய்ச்சல், மஞ்சட்காய்ச்சல், வயிற்றோட்டம் அநியாயமான அவச்சாவுகள்.

எம்மிடம் அறிவு என்னும் அருமருந்துண்டு. துன்பம் தீரவழியுண்டு
சுகாதார முறைமைகளை சீராகபேணுவோம்
எதிரியின் எண்ணத்தை உடைத்துத்தகர்ப்போம். உறுதிமிக்க ஆரோக்கிய வாழ்வை எம்மக்களிற்கு அளிப்போம்.
உங்கள் மண்ணை சுத்தமாக்குங்கள், விடியல் வெகுதூரத்தில் இல்லை.

❋ குடியிருப்பாளர்களே உங்கள் வீட்டுக்கழிவுகள் போடுமிடம் வீதிகளல்ல வடிகால்களல்ல வீட்டுவளவுகளுட் புதையுங்கள் அல்லது எரியுங்கள். சுற்றாடலிலுள்ள பற்றைக் காடுகளை அழியுங்கள்.

❋ உணவுச்சாலை உரிமையாளர்களே உங்கள் கழிவுகளை தகரக் கொள்கலன்களுள் சேகரித்துப் பேணுங்கள். சூழல் சுகாதாரம் கெட வீசாதீர்கள்.

❋ வடிகால்களை மூடாதீர்கள். அதில் தடைகளை ஏற்படுத்தாதீர்கள்.

❋ தேவையில்லாதவற்றை வீசாதீர்கள் புதையுங்கள் அல்லது எரியுங்கள் அல்லது தாழ்வான நிலப்பரப்புகளுட் சேர்த்து நீர் தேங்குவதை தடுத்துக் கொள்ளுங்கள்.

❋ தெருவோரங்களில் சுகாதாரமற்ற முறையில் விற்பனையாகும் உணவுகளைப் பசித்தாலும் புசிக்காதீர்கள்.

❋ உங்கள் கிணறுகளிற்கு குளோரின் இடுங்கள். சுத்தமான கொதித்தாறிய நீரையே பருகுங்கள்.

❋ உங்கள் கால்நடைகளைக் கட்டி வளருங்கள். கட்டாக்காலிகளிடமிருந்து உங்கள் அயலவர்களைக் காப்பாற்றுங்கள். மரணத்தின் பின்னே கப்பலில் வரும் சிறுமருந்துகள் உயிர்காக்காது.

சூழல் சுகாதார கேடுகளைக் களைய உங்கள் பகுதியிலுள்ள சுகாதாரவைத்திய அதிகாரி பணிமனை, உள்ளூராட்சி மன்றுகளை நாடுங்கள். பரிகாரம் தேடுங்கள். மக்களின் நோயற்ற சுக வாழ்விற்கு தூய்மையான அமைதியான சூழல் வேண்டும். சுயநலம் விடுவோம். பொதுநலம் படைப்போம். தொற்று நோய்களை சாகடிப்போம்.

இது ஒரு விளம்பரமல்ல
உங்கள் சுகவாழ்விற்கு
கசப்பற்ற இன்சுவை மருந்து

---

01. மனோகரன் அன்ட வெற்றிவேல்
49, அம்பலவாணர் வீதி,
யாழ்ப்பாணம்.

02. என். சி. சி. எல்,
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

03 ஸ்ரீ முருகன் தச்சுத்தொழிற்சாலை,
76, ஏ, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

04. கிருஸ்ணாஸ்,
பருத்தித்துறை வீதி,
இருபாலை.

05. கே. ஏ. என்ஜினியரிங்,
142, பலாலி வீதி,
திருநெல்வேலி.

06. வினாயகர் என்ஜினியரிங்,
கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில்.

# வடமாகாண
# அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கம்

(கி/3803)

### சிந்தனைக்கு

உன் கொள்கைப்படி நடக்கவும், உண்மையானதைப் பேசவும், நேர்மையானதைச் செய்யவும், தைரியத்தை வளர்த்துக் கொள்

— ஸரதுஸ்திரர்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 18-01-1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308

த. பெ. எண் 05

# முறிந்துபோன தொண்டா முயற்சி

அமைச்சர் தொண்டமானின் யாழ். விஜயம் பெரும்பாலும் கைவிடப்படும் நிலையை அடைந்துள்ளது. பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் இடம்பெறும் அங்கத்தவர்கள் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான எந்த யோசனைகளையும் பகிரங்கமாக விவாதிக்கக் கூடாது என்று நாடாளுமன்றத் தெரிவுக்குழு நிறைவேற்றியுள்ள தீர்மானம் அமைச்சர் தொண்டமானின் யாழ். விஜயத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளதுஎனலாம்.

பாராளுமன்றத் தெரிவுக்குழு மேற்கொண்டுள்ள தீர்மானம் பொதுப்படையானது. ஆயினும், இது அமைச்சர்தொண்டமானின் யாழ்ப்பாண விஜயத்தைத் தடை செய்வதற்கான திட்டமிட்ட ஒரு சதி வேலையாகும். அதே வேளை சிங்களப் பேரினவாதிகளை திருப்திப் படுத்துவதற்கும் இராணுவத் தீர்விற்கு சந்தர்ப்பத்தை வழங்குவதற்குமான நடவடிக்கையும் ஆகும்.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவராக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள மூனசிங்கா இருப்பினும் தெரிவுக்குழுவின் பெரும்பான்மை அங்கத்தவர்கள் ஐக்கியதேசிய கட்சியினரே. இந்நிலையில் அமைச்சர் தொண்டமானின் யாழ். விஜயத்திற்குத் தடைவிதித்தவர்களும் அவர்களேயாகும். மேலும், திரு. மங்கள முனசிங்காவோ அன்றிச் சுதந்திரக்கட்சியோ, அன்றி ஏனைய சிங்கள கட்சிகளோ கூட தொண்டமானின் யாழ். விஜயத்தை விரும்பியதாக இல்லை. இந்நிலையில் பாராளுமன்றத் தெரிவுக்குழு விதித்துள்ள மறைமுகத் தடையானது சிங்களப் பேரினவாத சக்திகளின் ஒருமித்த குரலின் வெளிப்பாடாகும்.

அமைச்சர் தொண்டமானும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் ஒரு அங்கத்தவர். பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்ட ஓர் தீர்வுத்திட்டத்தை வெளியிடுவதோ அன்றி அதற்கு ஆதரவு தேடுவதே பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் விதி முறைகளுக்கு முரண்பாடானதெனில்அதுஅமைச்சர் தொண்டமானுக்குத் தெரியாமல் இருக்க நியாயமில்லை. ஏனெனில் அவர் நீண்டகால அரசியல் அனுபவம் கொண்ட ஒரு சிரேஷ்ட அமைச்சராவார்.

மேலும் அமைச்சர் தொண்டமான் தனது தீர்வுத் திட்டத்தைச் சமர்ப்பித்தமையும் அதற்கு ஆதரவு தேட முயாற்சித்தமையும் யாழ்ப்பாணம் செல்லவுள்ளதாக அறிவித்தமையும் தற்பொழுது, சடுதியாக நிகழ்ந்த விடயமல்ல. தனது தீர்வுத்திட்டத்தைச் சமர்பித்து சிறிலங்கா ஜனாதிபதி, எதிர்கட்சித்தலைவர் சிறிமாவோ உட்பட பல எதிர் கட்சி தலைவர்களுடனும் தொண்டமான் பேச்சுக்களை நடத்தியுள்ளார். சுமார் மூன்று மாதம் வரையில் இது தொடர்பான சந்திப்புக்கள், பேச்சுகள் இடம்பெற்றன. ஆனால் அது வரையிலும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவோ அன்றி அதன் தலைவர் மங்கள முனசிங்காவோ இது தொடர்பாக கருத்து எந்தயும் வெளியிடவில்லை.

இந் நிலையில் தற்பொழுது அமைச்சர் தொண்டமானின் தீர்வுத் திட்டம் தொடர்பாக பேரினவாத சக்திகளின் எதிர்ப்பு பலமாக எழும்பியுள்ள வேளையில் அரசாங்கம் அதற்குப் பணிந்து எடுத்த நடவடிக்கையே பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தீர்மானம். இத்தீர்மானம் தனிப்பட்ட ரீதியிலோ அன்றி, நிறுவன ரீதியிலோ சமாதானத்தை விரும்பும் எவரும் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு அரசாங்கம் – பாராளுமன்றத் தெரிவுக்குழு - விதித்துள்ள தடையாகும். அதாவது பாராளுமன்றத் தெரிவுக்குழு என்ற போர்வையில் சிங்கள கட்சிகளைப் பெரும்பான்மையாகக் கொண்ட அமைப்பொன்று தமிழர் மீது ஒரு தீர்வுத்திட்டத்தை திணிக்க முற்படுவதையே இது காட்டுகிறது.

# 'ஐ. நா. பாதுகாப்புச்சபையில் இந். நிரந்தரமாக வேண்டும்'

உலகத்திலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடாக இந்தியா விளங்குவதால் ஐ. நா. பாதுகாப்புச் சபையில் இந்தியா நிரந்தர உறுப்பு நாடாகச் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என அமெரிக்க செனேட் உறுப்பினர் டானியல் மொகதிகான் கூறியிருந்தார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் செய்தியாளர் மத்தியில் பேசிய அவர், உலக ஸ்தாபனத்தில் ஐம்பது ஆண்டுக் காலத்திய சாசனத்தைக் கவனிக்க வேண்டிய தருணம் இதுவாகும் என்று சொன்னார்.

ஜனநாயகக் கட்சி உறுப்பினரான மொகதிகான் 1973 இல் இருந்து 1975 வரை இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதராகக்கடமையாற்றினார்

இந்த மாத முடிவில் நியூயோர்க்கில் நடக்க விருக்கும் ஐ. நா. பாதுகாப்புச் சபை உறுப்பு நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாட்டில் ஐ. நா. வின் அமைப்புப் பற்றி ஆராயப்படும் எனத் தான் எதிர் பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அணுவாயுதத்திறன் பற்றிப் பேசிய அவர், பாகிஸ்தானிடம் அணுவாயுதம் எதுவும் இல்லை என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்து விட முடியாது என்றும் தெரிவித்தார்.

### காங்கேசன்துறை

பதால் காங்கேசன்துறை ஊடாக பொருள்களைஇறக்கி கீரிமலை வழியாக இங்கு எடுத்து வருவதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் எடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றி அளிக்க வில்லை எனத் தெரியவருகிறது.

நேற்று இது தொடர்பாக மேற்படி குழு அரசஅதிபருக்கு அனுப்பியுள்ள செய்தியில் காங்கேசன் உணவுக் களஞ்சியம் திருத்தப்பட வேண்டியிருப்பதினாலும் துறைமுகத்திலிருந்து உணவுப் பொருள்களை ஏற்றிச் செல்வதற்குத் தேவையான வாகனங்கள் இதுவரை கொழும்பிலிருந்து கொண்டு வரப்படாமையினாலும் காங்கேசனில் பொருள்கள் இறக்கும்வேலை தாமதமடைந்துள்ளது. இதனை திறப்பதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்று தன்னால் கூறமுடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கொழும்பிற்கு

தற்கு தேவையான ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். சுருட்டுப் பொதிகளை கையாளுவதற்காக அதிக காலம் கப்பல் தாமதமடைவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இவ்வாறான நடைமுறைகளை கடைப்பிடிக்கும் பட்சத்தில் சுருட்டு அனுப்பும் முயற்சிக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் முழு ஆதரவு வழங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### வீதிவிபத்து

வுறுத்தல்களுக்கு அமைய வீதி ஒழுங்குகளை கடைப்பிடிக்குமாறு பொது மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

### பாதுகாப்பு

னர் சில மாதங்களாக இச் சோதனை நடவடிக்கைகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தன

மீண்டும் தற்போது சோதனை நடவடிக்கை ஆரம்பிகப்பட்டு மாத்தளை நகருக்கான சகல நுழைவாயில்களிலும், விசேடமாக தோட்டப்பகுதிகளுக்கான நுழைவாயில்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிய வருகிறது.

### மீனவர்

சாலை மாணவர்களும் யாழ். நகரில் ஊர்வலமாகச் சென்று சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரியிடம் மகஜர்ஒன்றைக் கையளித்தது தெரிந்ததே. இது தொடர்பாக அந்த அதிகாரி நேற்று முன்தினம் இராணுவ பிரிகேடியரை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு உறுதி அளித்தார். (ச)

### இல. திரும்பும்

நாடு திருப்பும் அரசாங்க ஊழியர்களை மீண்டும் வேலைக்கு சேர்த்துக்கொள்வோம் என்ற கொள்கை ரீதியான தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளோம் என்றும்,

இது குறித்து சகல திணைக்கள தலைவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதென்றும் இந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

இதே நேரம் இவர்களுக்கு தற்காலிக அடையாள அட்டைகள் வழங்கப்படும் எனவும், அகதிகளின் வீடுகளை திருத்தியமைக்க உதவிகள் வழங்கப்படுமென்றும் அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

### இந்திய

சுடன் நாம் பேச்சு வார்த்தை நடத்திய போது இனப்பிரச்சினையைத் தீர்க்க அரசு எடுக்கும் நடவடிக்கைகளை விளக்கிக் கூறினோம் என்றும்,

இந்த விவகாரத்தில் இந்திய மதிப்பீடு எமக்கு சாதகமாகவே உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இராமேஸ்வரத்திலிருந்து கொழும்பு வரை படகுச் சேவை ஒன்றினை ஆரம்பிக்குமாறு தாம் இந்தியாவைக் கேட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### ஐ. நாவுக்கு

சிறிலங்கா இராணுவ நிர்வாக அதிகாரத்திற்குட்பட்ட பகுதிமுகாம்களில்இவர்கள்குடியமர்த்தப்படுவதனால் அடிக்கடி துன்புறுத்தலுக்குள்ளாகக் கூடிய அபாயத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது. கிழக்கு மாகாணத்தில் பல நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் முகாம்களிலிருந்து கைதுசெய்யப்பட்டும்,காணாமற்போயும் தடுத்துவைக்கப்பட்டும் கொலை செய்யப்பட்டும் உள்ளார்கள் என்பதற்கு ஆவணங்கள் உள்ளன. அகதி முகாம்களில் நிகழ்ந்த இந்த மனித கோரச் செயல்கள் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபையும் மற்றும் மனிதநேய ஸ்தாபனங்களும் தமது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன என்றும்,

மேலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு இன்னும் காணப்படவில்லை. தமிழர் தாயகத்தில் நடைபெறும் யுத்தத்தினால் தமிழர்களின் உயிரும், உடைமையும் பாரிய அளவில் அழிவுக்குள்ளாகியுள்ளன. யுத்தச் சூழ்நிலையில் உள்ள பகுதியில் உள்ள முகாம்களில் தமிழ் அகதிகளைக் குடியமர்த்துவது இந்திய அரசின் மனிதாபிமானமற்றதும், பொறுப்பற்றதுமான செயல் ஆகும். இந்த முகாம்கள் இனவாத இராணுவத்தினால் நிர்வகிக்கப்படுவதனால், தமிழ் அகதிகளின் உயிருக்கும், சுதந்திரத்திற்கும் ஆபத்துண்டு என்றும்,

இந்தியா - சிறிலங்கா அரசுகள், இலங்கைத் தமிழ் அகதிகள் பிரச்சினையை ஐ. நா. உணர்வுகள் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்திற்கும் அமைவாகத் தீர்க்கத் தவறிவிட்டன என்பது எமது கருத்தாகும், மேலும் ஐ நா மரபுகளுக்கேற்ப வழங்கப்பட வேண்டிய அகதிகளுக்கான கௌரவம், பாதுகாப்பு, ஆபத்தின்மை ஆகியவை பேணப் படாமல் மீறப்பட்டுள்ளன என்றும்,

ஆகவே தமிழ் அகதிகளை வலுக்கட்டாயமாகக் திருப்பி அனுப்புவதைத் தடுக்கும்படியும், இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு தீர்வு ஏற்படும் வரை இராணுவத் துன்புறுத்தலுக்குப் பயந்து இந்தியாவிலும், உலகின் மற்றப் பகுதிகளிலும் தஞ்சமடைந்தவர்களைத் திருப்பி அனுப்ப வேண்டாம் என்றும் கோரப்பட்டுள்ளது சமாதான சூழ்நிலை ஏற்பட்டதன் பிறகு தமிழ் அகதிகளைக்குடியமர்த்துவது, அவர்கள் பாதுகாப்பான சுற்றாடலில் தமது சொந்தக் கிராமங்களிலேயே வாழ வழி செய்யும் எனவும் அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விடுதலைப்

கூட்டு முயற்சிக்கு ஒரு உகாரணமாகவும் இந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன.

1991 ஆம் ஆண்டு மே 21 இல் இடம்பெற்ற ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசாரித்துவரும் இந்திய பாதுகாப்பு அமைப்பின் ஒரு பிரிவான விசேட புலனாய்வுக் குழுவுக்கு சட்டவிரோதமான காரியங்கள் குறித்து விசாரணை செய்யும் சிறிலங்கா பாதுகாப்பு அமைப்புகள் புலிகள் நடவடிக்கை பற்றிய தகவல்கள் வழங்கி உதவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாரிய குற்றச் செயல்கள் பற்றி விசாரணை மேற்கொள்ளும் சிறிலங்காப் பொலிஸ் படையின் இரு பிரிவுகளான குற்றவியல் புலனாய்வுப் பிரிவும் துப்பறியும் பிரிவும் தமது முதுநிலைஅதிகாரிகளை தமிழ் நாட்டுக்கு அனுப்பி வைத்துள்ளன இவர்கள் இந்திய விசேட புலனாய்வுக் குழுவுடன்இணைந்து செயற்படவுள்ளார்கள்.

குறைந்தது பிரதிப் பொலிஸ் மாஅதிபர் தரத்திலுள்ள ஒரு அதிகாரியும் மற்றும் இரண்டு முதுநிலைப் பொலிஸ் அதிகாரிகளும் இப்போது தமிழ் நாட்டில் உள்ளார்கள்.

பொலிஸ் நடவடிக்கை ஒருபுறமிருக்க இந்தியா – சிறிலங்கா கடற்படைகள் ஒன்றுசேர்ந்து புலிகள் பாக்குநீரிணையைக் கடக்காமல் தடுக்கும் கூட்டு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளன.

இந்தியா - சிறிலங்கா பாதுகாப்புப் படைகளுக்கிடையிலான ஒத்துழைப்பு மற்றும் புலிகளுக்கு எதிரான நெருக்கடி ஆகியன வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்பதற்கான பேச்சுவார்த்தைக்குத் தடையாக அமையும் சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் அமைப்பை ஒரு பயங்கரவாத இயக்கம் எனப் பிரகடனப்படுத்த இந்தியா எண்ணி வருவதாகவும் அவதானிகள் கருதுகிறார்கள்.

இதேவேளை பெரியளவிலானயுத்தமொன்றுக்கு, குறிப்பாக யாழ். குடாநாட்டில் பெரும் யுத்தம் ஒன்றைச்

(4ஆம் பக்கம் பார்க்க)

### பொலிஸ்

பெற இருப்பதைத் தொடர்ந்து இப்பொலிஸ் அதிகாரிக்கு கட்டாய லீவை அரசு வழங்கி இருக்கின்றது.

ஜே. வி. பி. தீவிரவாதிகளுக்கெதிராக கடும் நடவடிக்கைகளை இவ் அதிகாரி எடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## முக்கிய அறிவித்தல்

அசல் ஆர். வி. ஜி. பீடிகளைப் போல் ஒரு சில நபர்களால் தரத்திலும் விலையிலும் குறைந்த போலி ஆர். வி. ஜி. பீடிகளை விற்பனை செய்வதாக அறிய வந்துள்ளோம். அசல் ஆர் வி. ஜி. பீடியின் விலையில் மாற்றம் எதுவும் இல்லை.

குறைந்த விலையில் போலி ஆர். வி. ஜி. பீடி விற்பனை செய்பவர்களை இனம்கண்டு எமக்குத் தகவல் தருமாறு பீடி விற்பனையாளர்களை அன்புடன் வேண்டுகின்றோம். போலி பீடி விற்பனையாளர் பற்றிய

**தகுந்த தகவல் தருபவர்களுக்கு தக்க சன்மானம் வழங்கப்படும்.**

**ஆர். வி. ஜி. நிர்வாகம்**
58, குறுக்கு வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(2099)

## வெளிவாரிப்பட்டப் படிப்புகள்

பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களின் பட்டப்பாட நெறிகளான

★ கலை முதற்தேர்வு (First in Arts)
★ விஞ்ஞான முதற்தேர்வு (First in Science
★ வணிக முதற்தேர்வு (First in Commerce)

க. பொ. த. உயர்தரத்தில் எந்தப் பிரிவாயினும் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் அல்லது பயிற்றப் பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி 31-01-1992**

இதுவரை விண்ணப்பிக்கத் தவறியவர்கள் தங்களைப் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பதிவு செய்து கொள்ள ஓர் அரியசந்தர்ப்பம்.

விபரங்களுக்கு:

உதவிப்பதிவாளர்,
**பட்டப்படிப்புகள் கல்லூரி**
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3778)

## நினைவு கூருகின்றோம்

## 1992 - 01 - 18

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் கதிரவெளியில் சிறிலங்காப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**லெப். இந்திரன்** (இராசதுரை கோணேஸ்வரன் - 7ஆம் வட்டாரம், கட்டைபறிச்சான், மூதூர்)

**2 ம் லெப். ரஜனி** (சங்கரமூர்த்தி உதயகுமார் - சம்பூர் திருக்கோணமலை)

1989 ஆம் ஆண்டு தம்பலகமம், பட்டிமேட்டுப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மின்சார விபத்தில் எம்மைப்பிரிந்த

**--ம் லெப். ரகு** (ஆறுமுகம் அமிர்தலிங்கம் - தம்பலகமம், திருக்கோணமலை)

நல்லதண்ணித் தொடுவாயில் இந்தியப்படையினருடனான மோதலின் போது வீரச்சாவெய்திய

**மாதவன்** (கனகசிங்கம் இராகுலசிங்கம் - மிருசுவில் வடக்கு, சாவகச்சேரி)

நெடுந்தீவில் தேடுதல் மேற் கொண்ட இந்தியப்படையால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞர்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(சி /3800)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சாந்தியகத்தில் உளவளத் துறை ஆலோசகர் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான பட்டமளிப்பு விழா இன்று பி. ப 3 மணிக்கு யாழ்ப்பாணம் மருத்துவமனை வீதி தொடர்பகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் ஏ. துரைராஜா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்புரை வழங்குவார்.

## 'காப்பரண்' வெளிவருகிறது

(யாழ்ப்பாணம்)

பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தினரின் முத்திங்கள் இதழான ''காப்பரண்'' நாளை வெளியிடப் படவிருக்கிறது.

காலை 9.00 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் பாடசாலை மண்டபத்தில் நடைபெற இருக்கும் வெளியீட்டு விழாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் திரு. யோகி வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

## 'உயிர்த்த மனிதர் கூத்து'

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் நாடக அரங்கக் கல்லூரி வழங்கும் ''உயிர்த்த மனிதர் கூத்து'' எனும்நாடகம் இன்று சனிக்கிழமை (18-1-92) பிற்பகல் 5.00 மணிக்கு அளவெட்டி மாவீரர் கலை அரங்கிலும் நாளை ஞாயிற்றுக்கிழமை (19-1-92) பி.ப. 4-00 மணிக்கு மருதனாமடம் இராமநாதன் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

## ஊனமுற்றோர் சங்கப் புதிய பணிமனை

யாழ். ஊனமுற்றோர் சங்கத்தின் புதிய பணிமனையின் திறப்புவிழா வைபவம் இன்று 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இல 16, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளியில் நடைபெற உள்ளது எனச் சங்கப்பொருளாளர் திருமதி ஜே. எம். சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார்)

(24.

## முகாமையாளர் அவசரக் கூட்டம்

யாழ்மாவட்ட ப. நோ. கூ. சங்க பொதுமுகாமையாளர்களுக்கான அவசர கூட்டம் இன்று பகல் 1.00 மணிக்கு யாழ் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்திற்கு அனைவரையும் தவறாது சமுகம் கொடுக்கும்படி யாழ்மாவட்ட கூட்டுறவுப் பிரிவினர் கேட்கின்றனர். நெல் கொள்வனவு சம்பந்தமான முழு விபரங்களையும் கூட்டத்தின் போது கொண்டு வரும்படி பணித்துள்ளனர்.

## விடுதலை

செய்ய சிறிலங்கா அரசு முஸ்தீபுகளைச் செய்து வருகிறது. வடக்கில் புலிளுகக்கும் அரச படைகளுக்குமிடையில் பாரிய யுத்தம் ஒன்று வெடித்தால், இந்திய கடற்படை தென் இந்தியக் கடல் பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கையைப் பலப்படுத்தும் என்றும், அது சிறிலங்காப் படைகளுக்குச் சாதகமான சூழ் நிலையைத் தோற்றுவிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க, விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை மேற்கத்திய நாடுகளில்கட்டுப்படுத்தும்படி இந்திய -சிறிலங்கா அரசுகள் ஐரோப்பிய நாடுகளை இடைவிடாது கோரி வருகின்றன.

## கழிவைக் காசாக்குவோம்

'லக்ஸ்பிறே', 'ஹைலண்ட்' பால்மா வெற்றுப் பக்கற்றுக்கள் ரூபா 1/- வீதம் கொள்வனவு செய்யப்படும். பனை அபிவிருத்திச்சபையின் 'கற்பகம்' விற்பனை நிலையங்கள், கைதடி பனைவள ஆராய்ச்சி நிலையம், கற்பகா உற்பத்தி நிலையம் (கச்சேரியடி) ஆகியவற்றிலோ அல்லது சுன்னாகம், மானிப்பாய் ஆகிய இடங்களிலுள்ள சபையின் உற்பத்தி நிலையங்களிலோ அல்லது 53, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள சபையின் சந்தைப்படுத்தும் பகுதியிலோ நேரடியாகக் கையளித்து உடன் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

பனை அபிவிருத்திச் சபை

(சி/1802)

லங்கா சித்த ஆயுர்வேத

## மருத்துவக் கல்லூரி

D. A. M. இறுதிவருடப் பரீட்சைக்கு தோற்றவிருப்போர் தமது விண்ணப்பப் படிவங்களைக் கல்லூரியில், அலுவலக நேரத்தில் பெற்று 20 - 02 - 1992 ற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

பதிவாளர்
127, ஸ்ரான்லி வீதி,
(அர்ச்சுனாவீதி)
யாழ்ப்பாணம். (2109)

லங்கா சித்த ஆயுர்வேத
மருத்துவக் கல்லூரி

## பிரவேசம் - 1992

தகைமை : க. பொ. த. [உயர்தர] பரீட்சையில் இரண்டுபாடங்களில் சித்தி. வைத்தியபரம்பரையில் வந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பங்கள் 20-02-92 வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களை கல்லூரியில் அலுவலக நேரத்தில் ரூபா 50/- செலுத்திப் பெற்றுக்கொள்ளவும்.

பதிவாளர்
127, ஸ்ரான்லி வீதி,
(அர்ச்சுனா வீதி)
யாழ்ப்பாணம். (2110)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவயோகம்மா வேலாயுதபிள்ளை

நயினாதீவு திருமதி சிவயோகம்மா வேலாயுதபிள்ளை அவர்கள் 16-01-1992 இல் பெரியதம்பனையில் காலமானார். இவர் பொன்னர் வேலாயுதபிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் திருமதி புஷ்பலீலாவதி திருமதி சாருகாசினி ((அதிபர் பெரியதம்பனை மகாவித்தியாலயம்) திருமதி ஈஸ்வரி (அரசினர் வைத்தியசாலை முல்லைத்தீவு) திருமதி வேதாரோகினி, திருமதி நவநிதி (தொழிற்திணைக்களம் வவுனியா) ஞானோதரன் [உதவி முகாமையாளர் இலங்கைவங்கி)யாழ்ப்பாணம்] ஞானவரோதயன் [பிரான்ஸ்] ஞானகாந்தன் [ஆசிரியர் முத்துத்தம்பி வித்தியாலயம்] ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு ச. கனகலிங்கம் (இ போ. ச. யாழ்ப்பாணம்) திரு. க. சீனிவாசகம் [அதிபர் வவுனியா மகாவித்தியாலயம்] திரு. சோ. மகேஸ்வரன் [இ.போ.ச. முல்லைத்தீவு] திரு. பொ. கலைநாதன் (சுப்பிரமணியம் கொம்பனி கொழும்பு-1] திரு. க. சிவபாலன் (உப முகாமையாளர் இலங்கை வங்கி, வவுனியா), திருமதி நாகரஞ்சினி, திருமதி, கலைச்செல்வி, திருமதி கேதாரபூரணி ஆகியோரின் அன்பு மாமியாரும் தாரணி, தர்சினி, யாதவன், சசீகரன், மேகலை, விஜிகாந், உமாகாந், அகிலா, கிருஷ்ணா, கோகுலன், ராகுலன், அகல்யா, சிற்பரன், நிமலன், ரஜீவ், அபிரா, ஆர்த்தி, மயூரன், சுகப்பிரதா, சுகவரதா ஆகியோரின் பேத்தியாரும் ஆவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று பெரியதம்புனையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்
வே. ஞானோதரன்
இலங்கை வங்கி

2112